This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# மாயா

www.writersujatha.com

## 1

கருங்கல் சுவர் ஆள் உயரம் இருந்தது. வாசலில் காவற்காரன் என் காரை நிறுத்தினான். என் பெயர் கேட்டான். "கணேஷ்" என்றேன். உடனே கதவைத் திறந்து என்னை அனுமதித்தான். காத்திருக்கிறார்கள் எனக்காக. திறந்த கதவின் கம்பிகளுக்கு நடுவில் ஆங்கில கே.எம். எழுத்துக்கள் சமீபத்திய பிராஸ்ஸோவில் பளபளத்தன. 'கிருஷ்ணா மிஷன்--உலக அமைதி' என்று அதன் கீழ் எழுதியிருந்தது. உள்ளே அந்தக் கட்டடத்தை அடையும் பாதை கவிதையுடன் நெளிந்தது. இருபுறமும் வரிசையாக குல்மோஹர், டாலியா, ஸெஸ்பானியா பூக்கள், கொடிகள், வர்ணங்கள், பச்சைப்புல் சதுர கஜங்கள்.

வெண்மையான கட்டடம். தந்தம்போல் மெலிதான, மஞ்சள் கலந்த, பளபளக்கும் வெண்மை. வெள்ளையடித்தவனை விசாரிக்க வேண்டும். "கில்லாடி வேலை வாத்யாரே!"

போர்ட்டிகோவில் என் கறுப்பு கார் உறுத்தி இருக்கும். எனக்காக அந்த மாது காத்திருந்தாள். "நீங்கள் பத்து நிமிஷம் லேட்" என்றாள். நான் கதவைத் திறந்து என் தாமதத்தைப் புன்னகையில் மறைத்தேன். பின் குறிப்பாக, "ஸாரி" என்றேன். அம்மாள் வெண்மை சாகரமாக இருந்தாள். அவளுக்கு வயது நாற்பத்து எட்டு இருக்கலாம். லேசாக மீசை இருந்தது. கண்களில் கண்ணாடி வட்டங்கள்; தலையில் நரை என்பதே இல்லை. விஸ்தாரமாக இருந்தாள்.

"ரொம்ப அழகான இடம், அமைதியான இடம்" என்றேன். அவள் பதில் சொல்லவில்லை.

நாங்கள் உள்ளே நுழைந்தோம். "பூட்ஸைக் கழற்றி விடுகிறீர்களா?" என்றாள். உடன்பட்டேன். உள்ளே 'ரொய்ங்' என்று ஆர்மோனியம் வேட்டை நாய் போல் தொடர, என்னால் கிரகிக்க முடியாத பாஷையில் ஒரு கோஷ்டிகானம் கேட்டது. கானத்தின் நடுவில் சீரான, மெதுவான கைதட்டுதல் கேட்டது. கானத்தில் இசையில் மோகனம் இருந்தது.

www.writersujatha.com

ஹால், எதிரே சுவரில் பெரும்பான்மையை அடைத்து கொண்டு ஒரு பெரிய கிருஷ்ணர் படம். நீலநிறத்தில் தவழ்ந்த கிருஷ்ணர் படம். ஒரு கையில் புல்லாங்குழலும் மற்றொரு கையில் உலகத்தையும் வைத்திருந்தார். தவழ்ந்த காலால் மற்றொரு உலகத்தை உதைத்துத் தள்ளிக் கொண்டிருந்தார். உதைக்கப்பட்ட உலகத்தில் நிறைய பாபாத்மாக்கள் இருந்தார்கள். அவர்கள் சுகித்துக் கொண்டும், படுத்துக் கொண்டும், பொதுவாகக் கெட்ட காரியங்கள் செய்து கொண்டிருந்தார்கள். கிருஷ்ணனின் கையில் இருந்த சலுகை உலகத்தில் எல்லோரும் சிரித்துக்கொண்டு, சதா சந்தோஷமாக, திலகமிட்டுக் கொண்டு, வெண்மயான உடைகள் அணிந்து கொண்டு ஏழாவது சொர்க்கத்தில் இருந்தார்கள். அதில் நான் இல்லை.

தரையில் கால் வைக்கக் கூசியது. அத்தனை சுத்தம். "என் அறைக்கு வருகிறீர்களா?" என்றாள். நடந்து கடந்தபோது அந்த பஜனை அறையில் பெரும்பாலும் புஷ்டியான பெண்கள் உட்கார்ந்திருப்பதைக் கவனித்தேன்.

www.writersujatha.com